மன்றப்பொருள்

2020 ம் ஆண்டு ஜீலை 31–07–2020 ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற **சாதாரணக்கூட்டம்** பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.

**திரு.எஸ். பிரபாகரன்**
**தனி அலுவலர்.**

1. ஆணையர் (கூ.பொ) அவர்களின் ஜீலை 2020ம் மாத நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

2. இந்நகராட்சியில் உள்ள கணிணி பிரிண்டரில் Toner மை 20 எண்ணிக்கையில் ரீபில் செய்வதற்கு மற்றும் 30 எண்ணிக்கை TVS பிரிண்டர்ஸ் Catridge புதிதாக வாங்குவதற்கும் நகரமன்ற தீர்மான எண். 509 நாள். 28.02.2020ல் ரூ. 33,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டும், அதன் அடிப்படையில் விலைப்புள்ளி 04.05.2020ல் கோரப்பட்டத்தில் கீழ்வருமாறு

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | Techno Solution | 35250.00 |
| 2 | Hi-Tech System | 36200.00 |
| 3 | Aims Net Cafe | 32900.00 |

வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Aims Netcafe நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அவசர அவசியம் என்பதால் மன்றம் அனுமதிக்கலாம். இதற்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

3. பண்ணுருட்டி நகராட்சி – தெருவிளக்கு தனியர் மூலம் பராமரிப்பு பண்ணுருட்டி நகராட்சியின் தெருமின் விளக்குகள் 1x40 வாட்ஸ்மொத்தம் 1600 எண்கள் கடந்த 2016-17 ம் ஆண்டு முதல் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற விலை விகித ஒப்புதல் ந.க.எண். 13899/2016/டிஓ1 நாள் 24.11.2016 ந் தேதியிட்ட நிர்வாக அனுமதியின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தனியர் மூலம் பராமிக்கப்பட்டு 2017-18 ம் ஆண்டுக்கான ஒப்பந்தக்காலம் 31.03.2018 வுடன் முடிவடைந்துவிட்டது. ஏற்கெனவே ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள மேற்கண்ட குழல்விளக்குகள் 1600 எண்களை பராமரிக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 2016-17,2017-18 மற்றும் 2018-19 வரை மூன்று வருடங்களுக்கு தொழிற்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆனால் ஒராண்டிற்கு அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பராமரிப்பு பணிகள் நடைபெற்று வந்தது. எனவே ஒப்பந்தக் காலம் 31.03.2018 ல் முடிவடைந்து 2018-19 ம் ஆண்டு பராமரிப்பு பணிக்கு ரூ. 15.81 லட்சத்திற்கு மன்றத்திற்கு பொருள் வைத்து மன்ற அனுமதி பெறப்பட்டு தனியர் மூலம் பராமரிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி ந.க.எண். 13899/2016/டிஓ1 நாள் 24.09..2018 ல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணியானை வழங்கப்பட்டு தெருகுழல்மின் விளக்குகள் பராமரிப்பு பணிகள் 05.02.2020 ல் முடிவடையும் நிலையில் உள்ளது.

இந்நிலையில் தெருகுழல் மின்விளக்குகள் 1600 எண்கள் பராமரிப்பு பணிகள் 2020-2021 ம் நிதியாண்டிற்கு ரூ.13.28 இலட்சத்திற்கு மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்ததாரரின் செயல்திறனின் அடிப்டையில் 2021-2022, 2022-2023 ம் நிதியாண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் மன்ற அனுமதி , மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று நீட்டித்துக் கொள்ளவும், மேலும் அடுத்த ஆண்டிற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ஏதுவாக நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்த நிறுவனத்தை முடிவு செய்வதற்கு கால அவகாசம் தேவைப்படுவதால் தற்பொழுதுள்ள விலை விகிதத்தில் தற்பொழுது பராமரிப்பு பணி செய்து வரும் நிறுவனத்தின் ஒப்பந்த காலத்தை 31.03.2020 வரை நீட்டித்து கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு நகர்மன்ற தீர்மான எண் 495 நாள் 31.01.2020ல் அனுமதி பெறப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற வரைவு கடிதம் மற்றும் மதிப்பீடு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நிலையில் உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனோ வைரஸ் நோய் (COVID 19) ன் தடுப்பு நடவடிக்கைக்கு தற்சமயம் தமிழக அரசும், மத்திய அரசும் ஊரடங்கு 144 தடையுத்திரவை 24.03.2020 அன்று அறிவித்து 14.04.2020 வரை அமுலில் இருக்கும் என தெரிவித்தது. பிறகு மத்திய அரசு கொரோனோ வைரஸ் நோய் (COVID 19) தாக்கம் காரணமாக 15.04.2020 முதல் 03.05.2020 வரை மேற்கண்ட தடையுத்திரவை நீட்டித்து அமுலில் இருக்கும் என தெரிவித்தது. மேலும் 01.06.2020 முதல் 15.06.2020 வரை தடையுத்திரவை நீட்டித்து அமுலில் இருக்கும் என தெரிவித்தது. பிறகு 16.06.2020 முதல் 31.07.2020 வரை தடையுத்திரவை நீட்டித்து அமுலில் இருக்கும் என தெரிவித்தது. இதே போல் தடையுத்திரவு தொடர்ந்து நீடித்து வரும் நிலையில் அரசு அலுவலகங்கள் ஸ்தம்பித்த நிலையில் உள்ளதால் மேற்கண்ட பணிக்கான அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் செய்ய கால அவகாசம் தேவைப்படுவதால் தற்பொழுதுள்ள விலை விகிதத்தில் தற்பொழுது பராமரிப்பு பணி செய்து வரும் நிறுவனத்தின் ஒப்பந்த காலத்தை 01.07.2020 முதல் 30.09.2020 வரை மூன்று மாத காலங்களுக்கு நீட்டித்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. 01.07.2020 முதல் 30.09.2020 ஒப்பந்தம் நீட்டிக்கப்பட்ட காலத்திற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண். 0403 /2020/இ2 )

4. பண்ணுருட்டி நகராட்சியில் உள்ள தினசரி சந்தையில் சுங்கவரி வசூலிக்கும் உரிமம் திருமதி. ஆர்.ரத்தினாம்பாள் கடந்த 06.03.2018ந் தேதியே பொது ஏலத்தின் மூலம் குத்தகை உரிமம் பெற்று 01.04.2018 முதல் 31.03.2021 முடிய 3 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் எழுதி கொடுத்து அதற்கான உரிமம் பெற்று தொடர்ந்து குத்தகை இனத்தினை அனுபவித்து வருகிறார். இந்நிலையில் மூன்று ஆண்டு காலத்துக்கு முடிவுறாத நிலையில் கடந்த 24.03.2020 முதல் கோரோனா வைரஸ் பரவல் காரணமாக நாளது தேதிவரை ஊரடங்கு காலம் நீட்டிப்பு இருப்பதினால் தினசரி சந்தை மூடப்பட்ட நிலையிலேயே உள்ளது. இதனால் சுங்கவரி வசூலிக்க இயலாத நிலையில் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் இதன் பொருட்டு சுங்கவரி வசூல் செய்ய இயலவில்லை இதனால் தனது குத்தகை உரிமத்தை ரத்து செய்யுமாறும், தான் செலுத்திய வைப்புத் தொகையினை ஈடு செய்து கொள்ளுமாறு கேட்டு 03.05.2020ல் மனு அளித்துள்ளார். இதனை வருவாய் ஆய்வாளரும் ஆய்வு செய்து அறிக்கை அளித்துள்ளார்.

அதன்படி : 1. குத்தகை இனத்தை ரத்து செய்திட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைத்து முடிவு செய்யலாம்.

2. மன்ற முடிவிற்கு பின் வைப்புத் தொகை நிலுவை கட்டணத்தினை ஈடு செய்யலாம்.

3. குத்தகை உரிமத்தினை ரத்து செய்திட மன்ற அனுமதித்திடும் வரை உள்ள காலத்திற்கான குத்தகை பாக்கி செலுத்தி அறிவிப்பு வழங்கி வருவாய் ஆய்வர் மூலம் வசூல் செய்திட நடடிவக்கை மேற்கொள்ளலாம்.

4. மன்ற முடிவிற்கு பின்பு பொது ஏலம் விடும்வரை இடைப்பட்ட காலத்திற்கு வருவாய் ஆய்வர் தலைமையின் கீழ் குழு அமைத்து நிதியிழப்பு இன்றி சுங்கவரி வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகராட்சிக்கு நிதிஇழப்பு ஏற்படாவண்ணம் துறைரீதியான வசூல் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. குத்தகை உரிமம் ரத்து செய்தபின்பு மறுஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

கோ.எண். 719 / 2020 /அ1

5. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வார்டு வரை உள்ள தெருக்களில் உள்ள SV Lamp, LED Lampகள் நகராட்சி பணியாளர்கள் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பல இடங்களில் விளக்குகள் எரியாமல் உள்ளது. மேலும் SV Lamp பொருட்கள் இருப்பு இல்லாததாலும், பொதுமக்களிடம் இருந்து தொடர்ந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளதாலும், பொதுமக்களின் தெரு விளக்கு அத்தியாவசியம் கருதி மேற்கண்ட மின் விளக்குகள் வாங்குவதற்கு ரூ. 5.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.இதற்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

கோ.எண். / இ2 / 2020

6. கடலூர் மாவட்டத்தில் இராணுவ ஆள்சேர்ப்பு நடைபெற்றதில் பொதுப்பணித்துறை (கட்டடம் மற்றும் பாராமரிப்பு) மூலம் முன்னேற்பாட்டு பணிகளான தற்காலிக மின்சார வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டது. மேற்கண்ட வகையில் செலவினங்களுக்கான தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ந.க.எண் 2/7012/2019 நாள் 20.08.2019 தேதிய கடிதத்தில் உதவி பொறியாளர், பொதுப்பணித்துறை (கட்டடம் மற்றும் பாராமரிப்பு) மூலம் முன் மொழியும் தோகை ரூ.2,12,406/– பண்ணுருட்டி நகராட்சி பொதுநிதி தலைப்பில் செலவு செய்திட தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து பொதுப்பணித்துறை (கட்டடம் மற்றும் பாராமரிப்பு)அவர்கள் முன் மொழிந்துள்ள ஒப்பந்ததாரர் திரு. N.செந்தில்நாதன் அவர்களுக்கு வழங்க கோரப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட தொகையினை பொது நிதியில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ந.க.எண் 2/7012/2019 நாள் 20.08.2019 தேதிய கடிதத்தின் படி மேற்கண்ட தொகையினை பொது நிதியில் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.901/2020/இ1

7. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்டுள்ள இடங்களில் குடிநீர் பற்றாகுறை உள்ளதாக பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. அதனைத் தொடர்ந்து பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியம் கருதி கீழ்கண்டவாறு மதீப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

1) வார்டு எண் 32 இருளங்குப்பத்தில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் 15HP மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் புதியதாக அமைத்து OHTக்கு உந்தும் பணி.
2) வார்டு எண் 2 நகராட்சி துவக்கப்பள்ளியில் அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணற்றில் 15HP மோட்டார் பொருத்தப்பட்டு குடிநீர் குழாய் புதைக்கப்பட்டு வார்டு எண் 3 விழமங்கலம் வ.ஊ.சி. நகரில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு குடிநீர் உந்தும் பணி.
3) வார்டு எண் 26 மணி நகர் உரக்கிடங்கில் உள்ள ஆழ்துளை கிணற்றில் 10HP மோட்டார் பொருத்தி குடிநீர் பிரதான குழாயில் இணைப்பு வழங்குதல்.
4) வார்டு எண் 12 செட்டிபட்டறை காலணியிலிருந்து வார்டு எண் 11 அசோக் நகருக்கு பிரதான குடிநீர் குழாய் அமைத்து இணைப்பு வழங்குதல்.

மேற்கண்ட பணிகள் செய்ய மதீப்பீடு ரூபாய்.10,00,000/- தயார்க்கப்பட்டுள்ளதை நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு:-_1._மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1057/2020/இ2

8. பண்ணுருட்டி நகராட்சி, பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மையின் கீழ் தரம்பிரிக்கப்பட்ட குப்பை கழிவுகளை மட்கும் குப்பை OCC யிலும், மட்காத குப்பைகளை விற்பனை செய்யக்கூடிய கழிவுபோக மீதம் உள்ள கழிவுகளை சேகரித்து வைப்பதினால் மாதம் சுமார் தோராயமாக 5000 எண்ணிக்கை போரோ சாக்கு தேவைப்படுகிறது. தற்பொழுது கோரோனா நோய் பரவும் காலமாக உள்ளதாலும் அதனை பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் ஒப்பந்ததாரரிடம் 'போரா' சாக்கு வாங்குவதற்கும் அதற்கான தோராய செலவினம் ரூ. 1.75/–க்கும்(ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

கோ.எண். /2020/எச்2

9. பண்ணுருட்டி நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு துப்புரவு பணி செய்திட தளவாட பொருட்கள் இரண்டு ஆண்டுகளாக வாங்கப்படவில்லை. ஆகையால் பொது சுகாதார பணி மிகவும் பாதிப்படைந்து வருகிறது. வரும் காலம் மழைக்காலம், மேலும் கொரோனா நோய் பரவி வருவதால், அரசின் வழிகாட்டுதலின்படி உள்ளூர் ஒப்பந்ததாரரிடம் வாங்கிக் கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.3.5/– (மூன்றரை லட்சத்திற்கும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளலாம்

கோ.எண். /2020/எச்1

10. பண்ணுருட்டி நகராட்சி பொது சுகாதார பிரிவு இந்நகராட்சி பகுதிகளில் உள்ள 33 வார்டுகளில் சேகரிக்கப்டும் மட்கும் குப்பை உரக்குடிலுக்கும், மட்காத குப்பைகளை MCC–க்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. அவ்வாறு சேகரம் ஆகும் குப்பைகளை பெய்லிங் இயந்திரம் மூலம் பிளாஸ்டிக்குகளை பண்டல் செய்வதற்கு ரோல் டேப், கிளிப் தேவைப்படுவதால் அதனை வாங்க கடந்த 29.01.2020 அன்று ஆணையர் அவர்களிடம் அனுமதி பெற்று நகரமன்ற தீர்மான எண். 493, நாள். 31.01.2020–ல் அனுமதி பெறப்பட்டு இதுநாள் வரை வாங்கவில்லை. தற்பொது கொரோனா தொற்றுநோய் பரவுவதால் னஉள்ளூர் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கண்ட ரோல் டேப், கிளிப் வாங்க பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி அனுமதி வழங்க ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளலாம்

கோ.எண். /2020/எச்1

11. பண்ணுருட்டி நகராட்சி பொது சுகாதார பிரிவு, இந்நகராட்சியில் மொத்தம் 33 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகளின்படி குப்பைகளை மட்கும் குப்பை, மட்காத குப்பை, என பிரித்து வாங்கப்பட்டு, 1.அ.ப.சிவராமன் நகர்(occ), 2. பஞ்சவர்ணம் நகர்(occ), 3. Housing Board (occ) 4. பஞ்சவர்ணம் நகர் (முத்தையா நகர்) (occ) 5. மணி நகர் (occ) 6. நேதாஜி நகர் (mcc) (விரைவில் பணி முடிவடைய உள்ளது) இவைகளுக்கு அனுப்பப்பட்டு உரமாக்கும் பணி நடைபெற்று வருகிறது. இங்கு சேகரமாகும் குப்பைகளை அளவிடுவதற்கு எடை மிஷின் மிகவும் அத்தியாவசிய தேவைப்படுவதால்,அவைகளைWeighmachine 6 Nos. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும், தற்பொது கொரேனா காலமாக உள்ள அரசின் வழிகாட்டல்படி உள்ள விலையிலேயே section 15-ல் வாங்குவதற்கும், அதற்கு உண்டாகும் தோராய செலவினம் ரூ. 60,000/– அறுபது ஆயிரம் மட்டும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளலாம்

கோ.எண். /2020/எச்1

12. பண்ணுருட்டி நகராட்சி சார்பாக கெடிலம் நதிக்கரை அருகே அமைக்கப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மேடையினை வருடம் முழுவதும் 01.04.2019 முதல் 31.03.2020 வரை பராமரிக்க 28.02.2019 அன்று நகராட்சியின் சார்பாக கோரபட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த MHT Engineering, Chennai-32. என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு, (நகரமன்ற தீர்மான எண். 332 நாள். 28.02.2019) நகரமன்ற தீர்மான எண் 333 நாள். 28.02.2019–ன்படி பொது வருவாய் நிதியில்யிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டு பண்ணுருட்டி நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எ 243/2019/எச்2 நாள். 01.03.2019–ன்படி உத்தரவு MHT Engineering. நெ. 17/12, கற்பக விநாயகர் கோவில் தெரு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை–32. என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு நகராட்சி நிபந்தனைகுட்பட்டு 01.04.2019 முதல் 31.03.2020 வரை பணி செய்ய உத்தரவு வழங்கப்பட்டு, தற்பொழுது வரை நல்லமுறையில் பணி செய்து வருகின்றனர்.

இந்நிலையில் மேற்கண்ட ஒப்பந்தகாலம் 31.03.2020 உடன் முடிவடைவதால், நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஏற்படும் இறப்பு பிரேதத்தை எரிப்பது மிக மிக அத்தியாவசிய பணி என்பதாலும், தற்பொழுது கொரோனா வைரஸ் பரவி மக்கள் அதிகம் பாதிப்புக்குள்ளாகும் சூழ்நிலையில் அரசு அறிவித்த டெண்டர் தளர்வு வழிகாட்டு நெறிமுறைகளின்படியும், மேற்கண்ட MHT Engineering நிறுவனம் தற்பொழுது நன்கு பணி செய்து வந்துள்ளதாலும், மேலும் பழைய ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே தொடர்ந்து பணி செய்ய சம்மத கடிதம் கொடுத்துள்ளதாலும், தற்பொழுது உள்ள சுகாதார சூழ்நிலையில் பிரேதத்தை சுகாதாரமான முறையில் எரியூட்டுவதற்கு மேற்கண்ட MHT Engineering, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை–32 என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்த விதிகளுக்கு உட்பட்டு மேலும் ஓராண்டிற்கு 01.04.2020 முதல் 31.03.2021 முடிய ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு நவீன எரிவாயு தகன மேடையினை பராமரிப்பு செய்திடவும், பிரேதங்களை எரியூட்டல் செய்திடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 5.65 லட்சம் (ரூபாய் ஐந்த லட்சத்து அறுபத்தைந்தாயிரம்) வருவாய் நிதியில் இருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்திடவும் அனுமதிக்கலாம்.

3. அவசர அவசியத்தினை கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தகாலத்தை மேலும் ஓராண்டு நீட்டித்துக்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண். 904/2020/எச்2

13. துணை இயக்குநர் சுகாதார பணிகள், கடலூர் அவர்களின் ந.க.எண். 6873/ஆ4/2019 நாள். 30.12.2019 தெரிவித்துள்வாறு கொசு ஒழிப்பு பணியை நீட்டிப்பு செய்து ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் 2020 வரை 200 வீடுகளுக்கு ஒரு தற்காலிக பணியாளர் வீதம் நியமித்து 50 DBC பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.200/– வீதம் ஜான்சிராணி மகளிர் சுய உதவிக்குழு மூலம் பணி செய்து வருகின்றனர். மேற்கண்ட 89 வேலை நாட்களுக்கு பணி மேற்கொண்டதற்கு அனுமதியும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.DBC பணியாளர்கள் 50 நபர்களை நியமித்து ஜான்சி ராணி சுய உதவிக்குழு மூலம் நாள் ஒன்றுக்கு பணியாளர் ஒருவருக்கு ரூ.200/– வீதம் வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண். 2486/எச்1/2020

14. துணை இயக்குநர் சுகாதார பணிகள், கடலூர் அவர்களின் ந.க.எண். 6873/ஆ4/2019 நாள். 30.12.2019 , மண்டல நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் தெரிவித்துள்வாறு டெங்கு கொசு ஒழிப்பு பணிக்காக வரும் காலம் மழைகாலம் என்பதால் நோயின் தீவிரத்தை கட்டுப்படுத்த ஜுலை 2020 முதல் செப்டம்பர் 2020 வரை உள்ள 89 நாட்களுக்கு 200 வீடுகளுக்கு ஒரு தற்காலிக பணியாளர் வீதம் நியமித்து 50 DBC பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு மாவட்ட ஆட்சித்தலைவரின் கடிதத்தில் தெரிவித்துள்ள ஊதிய விகிதப்படி ஜான்சிராணி மகளிர் சுய உதவிக்குழு மூலம் பணி செய்வதற்கும், அதற்கான உத்தேச செலவினத்திற்கும் ஆகும் செலவினம் ரூ.10.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.DBC பணியாளர்கள் 50 நபர்களை நியமித்து ஜான்சி ராணி சுய உதவிக்குழு மூலம் நாள் ஒன்றுக்கு பணியாளர் ஒருவருக்கு ரூ.200/– வீதம் வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண். 2486/எச்1/2020

15. இந்நகராட்சியில் அன்றாட பயன்பாட்டில் பயன்படுத்தப்படும் கணிணி கீ–போர்டு (keyboard) மவுஸ் (mouse) மற்றும் கணிணி மானிடர் (Computer Monitor) இருப்பு முடிவடைந்துவிட்டதால் கீழ்வருமாறு எண்ணிக்கையில் தேவைப்படுகிறது.

| வ.எண் | கணிணி சார்ந்த சாதனங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கீபோர்டு (Keyboard) | 20 |
| 2 | மவுஸ் ( Mouse) | 20 |
| 3 | மானிடர் (Computer Monitor) | 3 |

மேற்கண்ட எண்ணிக்கையில் கணிணி சார்ந்த சாதனங்கள் புதிதாக வாங்குவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான தோராய செலவு ரூ.50,000/– ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. மன்றப் பொருள் விரைவு ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
கோ.எண். / /2020

16. இந்நகராட்சியில் கணிணி அறையில் உள்ள குளிர்சாதனப் பெட்டி ஆணையாளர் அறைக்கு மாற்றப்பட்டு பொருத்தப்பட்டுள்ளதால், கணிணி அறைக்கு புதிதாக 1.5 டன் குளிர்சாதனப் பெட்டி (Air Condition) ஒரு எண்ணிக்கை வாங்குவதற்கு அதனை அறையில் பொருத்தி இயக்குவதற்கும் ஆகம் செலவினம் ரூ.55,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
கோ.எண். / /2020

17. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்டுள்ள தெருக்களுக்கு குடிநீர் பிரதான குழாய் இல்லாததால் குடிநீர் இணைப்பு வழங்க இயலாத நிலையில் உள்ளது. மேலும் பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து குடிநீர் இணைப்பு வேண்டி தொடர்ந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. பொது மக்களின் குடிநீர் அத்தியாவசியம் கருதி கீழ்கண்டுள்ள தெருக்களுக்கு குடிநீர் பகிர்மான குழாய் அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

1. கெடிலம் ஆற்றுப்படுகையிலிருந்து வ.உ.சி. தெருவிற்கு பிரதான குடிநீர் குழாய் அமைத்தல்.
2.வார்டு 28 விஸ்வநாதன் நகர்
3. வார்ட 28 திடீர்குப்பம்.
4. வார்டு 28 முத்தையா நகர்
5. வார்டு 25 பண்ணுருட்டியார் நகர்
6. வார்டு 26 பிருந்தாவனம் நகர் மற்றும் சக்தி நகர்

மேற்கண்ட தெருக்களுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 5,00,000/– இலட்சம் (ரூபாய் ஐந்து லட்சம்) மட்டும் நிர்வாக அனுமதி பெற, நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
கோ.எண். /இ2/2020

இடம் –பண்ணுருட்டி நகராட்சி
நாள் – 31–07–2020

ஆணையாளர் (பொ)/தனி அலுவலர்
பண்ணுருட்டி நகராட்சி.